IN THE COURT OF THE ADDL. DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.168/2021
DEPOSITION OF WITNESS (PW2)

ஆரம்ப நேரம்:12.15p.m

<u>வா.சா. 2 சாட்சி தமிழ்செல்வி க.பெ.நாராயாணசாமி</u>

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Additional District Munsif on 17.03.2025 in accordance with the provisions of Act XX141.**

<u>3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

1. 2ம்வாதி எனது சகோதரர் ஆவார். அவர் ஆரோக்கியமாகத்தான் உள்ளார்.

வாதிகள் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் பாதை கோரி தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி பாதைக்கான ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். மேற்படி பாதை எந்த சர்வே எண்ணில் கட்டுப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

2. பாதை சம்மந்தமாக வருவாய்துறை ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். பாதை சம்மந்தப்பட்ட ஆவணங்கள் எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்குச் சொத்தின் நீளம், அகலம் தெரியுமா என்றால் தென்வடலாக 107அடியும், கிழமேலாக 12 அடியும் ஆகும். தாவாச் சொத்தின் அருகே எனது வீடு உள்ளதா என்றால் மேற்கு பக்கம் எனது வீடு உள்ளது. எனது வீட்டிற்கு சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது.

3. எனது வீட்டின் வாசல்படி எந்த பக்கம் உள்ளது என்றால் கிழக்கு பக்கம் உள்ளது. கிழக்கே தென்வடல் வீதி உள்ளதா என்றால் உள்ளது. வழக்குச் சொத்திற்கு வடக்கே வீடு உள்ளது. தெற்கே காலியிடம் ஆகும். தாவாச் சொத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. வாதிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்:12.25p.m.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

/sd/E.Manikandan
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.